கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு விடையளிக்க என்னிடம் தகவல் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : சார், தகுதியிருந்தும் கணவன் மனைவி இருவர் இருந்தால், கணவனுக்கு கொடுத்தால் மனைவிக்கு இல்லை, மனைவிக்கு கொடுத்தால் கணவனுக்கு இல்லை என விதி மாற்றியமைக்கப்பட்டுள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு அமைத்த விதிகள் அப்படியே இருக்கின்றன. அந்த விதிகளின்படி யார் யாருக்குக் கொடுக்க முடியுமோ அவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : முதியோர்கள் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்துக்கொண்டு அதன் மூலம் வசதிகளைக் கேட்டால் அதை அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பென்ஷனர்கள் சங்கம் இருக்கிறது. அவர்களுக்குப் புதிதாக யாராவது தலைவர் முன் வந்து சங்கம் அமைத்து அதனுல் தங்களுக்கும் அனுகூலமா என்று அவர்களே கவனிக்க வேண்டும். (சிரிப்பு)

திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் : சில முதியோர்களுக்கு முதலிலேயே பரிசிலனை செய்யப்பட்டு உதவி கொடுக்கப்பட்டிருந்தும், பிற்பாடு மறுபரிசிலனை செய்து கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிருர்கள். அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதல் பரிசிலனையில் சில தகவல் தெரியாமல் போயிருக்கலாம். அதற்காகத்தான் புனர்ப் பரிசீலனை செய்கிருர்கள்.

மணியார்டர் மூலமாக பென்ஷன்

*** 381 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குறைந்த அளவு பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு பென்ஷன் வாங்க போக்குவரவு செலவும் சங்கடமும் அதிகம் ஏற்படுவதால் 50 ரூபாய்க்குக் குறைந்த பென்ஷன் தொகை வாங்குகிறவர்களுக்கு மணியார்டர் மூலம் தொகை அனுப்ப உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு மேற்படாத பென்ஷன் தொகையை மணியார்டர் மூலம் அனுப்புவதற்குத் தற்போதைய விதிகளில் ஏற்கனவே அனுமதியிருக்கிறது. ஆனல், பென்ஷனர் பென்ஷன் தொகையைத் தமது செலவில் மணியார்டர் மூலம் அனுப்பும்படி எழுதிக்கொடுக்க வேண்டும்.

பென்ஷன்

*** 382 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முதியோர் பெறும் உதவித் தொகை ரூ. 20-ஐவிட, அரசாங்கத்தில் 30 வருடம் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களின் பென்ஷன் தொகை குறைவாக கிடைப்பதால் ரூ. 20-க்கு குறைந்து